தினமலர்
கம்ப்யூட்டர் மலர்
ஆகஸ்ட் 30, 2010 இதழுடன் இணைப்பு

15 ஆவது ஆண்டில் இன்டர்நெட் எக்ஸ்புளோரர்

குறிப்பிட்ட தளங்களை மட்டும் தனிப்பார்வையில்

மின்னஞ்சல் பிழைச் செய்திகள்

நீளமான இமெயில் முகவரி

ஆங்கில அகராதியில் புதிய தகவல் தொடர்பு சொற்கள்

ஆக்ஸ்போர்ட் பல்கலைக் கழகம் தயாரித்து வழங்கும் ஆங்கில அகராதி உலகப் புகழ் பெற்றது. குறிப்பிட்ட கால அளவில் இந்த அகராதியின் ஆசிரியர் குழு, புதிதாக ஆங்கில மொழியில் புழங்கும் சொற்களை அகராதியில் அதிகார பூர்வமாக இணைக்கும். அந்த வகையில் அண்மையில் வெளிவந்த புதிய அகராதி பதிப்பில், 2,000 சொற்கள் அகராதியில் சேர்க்கப்பட்டுள்ளன. அவற்றில் தகவல் தொடர்பு மற்றும் கம்ப்யூட்டர், இன்டர்நெட் பிரிவுகளில் புதிதாக உருவாகிப் பயன்படுத்தப்படும் பல சொற்கள் உள்ளன. அவற்றில் சிலவற்றை இங்கு பார்ப்போம்.

Tweetup Tweet மற்றும் Meetup என்ற சொற்களின் இணைப்பு. Twitter தளம் மூலம் ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டம் என்பது இதன் பொருள்.

Defriend: இன்டர்நெட், மெயிலிங் லிஸ்ட் ஆகியவற்றில் நீங்கள் ஏற்படுத்திய உங்கள் நண்பர்கள் பட்டியலில் இருந்து ஒருவரை நீக்குவதனை இந்த சொல் குறிக்கிறது.

Chillax: சற்று குளிர்ச்சியாகவும் ஓய்வாகவும் (Chill + Relax) இரு

Micor Blogging: ஒரு இணைய சேவை. சேவை ஒன்றில் சிறிய செய்தியினை அந்த சேவையைப் பெறும் அனைவருக்கும் அனுப்புவது.

Paywall: குறிப்பிட்ட இணைய தளத்தில் உள்ள தகவல்களை, கட்டணம் செலுத்திய பின்பே அனுமதிக்கும் சாப்ட்வேர் சுவர்.

Netbook: நெட்புக் கம்ப்யூட்டர் இன்னும் பெரிய அளவில் புழக்கத்திற்கு வரவில்லை என்றாலும், ஆக்ஸ்போர்ட் அகராதி இதற்கு அங்கீகாரம் தந்து எடுத்துக் கொண்டுள்ளது.

சில சொற்கள், மொழி இலக்கணப்படி முறையாக இல்லை என்றாலும், அகராதியில் இணைக்கப் பட்டுள்ளன. மொழியியலாளர்கள் இவற்றைக் கண்டு முகம் சுழித்தாலும், இவை அகராதியில் இடம் பிடிக்கின்றன. அவற்றில் சில,

Wurfing: வேலை (Work+Surfing) பார்க்கும் போது, திருட்டுத்தனமாக இணையத்தில் உலா வருவது.

Earworm: சில ட்யூன்கள் நம் மனதில் இடம் பிடித்து, நம் தலைக்குள்ளாக ரீங்காரம் செய்து கொண்டே இருக்கும். அதனை இச்சொல் குறிக்கிறது.

Nonversation: வெட்டி அரட்டை என்று நம் மக்கள் கூறுவார்கள் இல்லையா? அதனை இந்த சொல் குறிக்கிறது.

இப்படி பல சொற்கள் இணைக்கப்பட்டுள்ளன.

உள்ளே

மின்னஞ்சல் பிழைச் செய்திகள் பக்கம் 3

நீளமான இமெயில் முகவரி பக்கம் 10

இன்டர்நெட் எக்ஸ்புளோரர் வரலாறு பக்கம் 12

வாசகர்களே...

உங்கள் கேள்வி, சந்தேகம், கருத்துக்களை அனுப்புகையில் அந்தந்தப் பகுதியின் தலைப்புகளை குறிப்பிடவும்.

கம்ப்யூட்டர் மலரில் இன்னும் என்ன தகவல்கள் வேண்டும் என்ற உங்களின் எதிர்பார்ப்பையும் எழுதுங்கள்.

கம்ப்யூட்டர் நூல்கள்

கம்ப்யூட்டர் தொடர்பான நூல், 'சி.டி.'க்களை கம்ப்யூட்டர் மலரில் வெளியிட 2 பிரதிகளை அனுப்பவும்.

2010 ஜனவரி பிறகு உள்ள 'சிடி'க் களை மட்டும் அனுப்பவும். 'சி.டி.' யை உருவாக்கியவர், தயாரித்த நிறுவனம், விலை, வெளியிட்ட நாள், கிடைக்கும் இடம் ஆகியவற்றை குறிப்பிடவும்.

தினமலர் – கம்ப்யூட்டர் மலர், 8, காசா மேஜர் ரோடு, எழும்பூர், சென்னை 600 008.

computermalar@dinamalar.in

மின்னஞ்சல் பிழைச் செய்திகள்

சாப்பிடுகிறோமோ இல்லையோ, அன்றாடம் நமக்கு வந்திருக்கும் மின்னஞ்சல்களைப் பார்ப்பதுவும், அவற்றிற்கான பதில்களை அனுப்புவதும் நம் அன்றாட வேலையாக மாறி வருகிறது. இவை எல்லாம் சரியாகச் செல்லும் வரை நாம் கவலைப்பட வேண்டியதில்லை. ஆனால் பல வேளைகளில், மின்னஞ்சல் பரிமாற்றத்திலும் நமக்குப் பல பிழைச் செய்திகள் கிடைக்கின்றன. அவற்றில் சிலவற்றை இங்கு காணலாம்.

1. Delivery Error: இந்த பிழைச் செய்தி சில வேளைகளில் 550 அல்லது 554 என்ற எண்ணுடன் குறிப்பிடப்படும். இது பொதுவாக அடிக்கடி பெறப்படும் பிழைச்செய்தியாகும். இதன் பொருள்: நீங்கள் பயன்படுத்திய மின்னஞ்சல் முகவரி என ஒன்று இல்லவே இல்லை. இதற்கு எந்த மெயிலையும் அனுப்ப முடியாது என்பது தேவ. இதற்குக் காரணம், முகவரி அமைப்பதில் ஏதேனும் சில எழுத்துப் பிழைகள் ஏற்பட்டிருக்கலாம். முகவரியில் உள்ள எண்கள் அல்லது வேறு குறியீடுகள் விடுபட்டிருக்கலாம்.

2.Unknown host: இதற்கான எண் எதுவும் இருக்காது. காரணங்கள்:1) முகவரியில் இறுதியில் உள்ள சர்வரின் பெயரில் எழுத்துப் பிழை, 2) அந்த பெயரில் இப்போது எந்த சர்வரும் இல்லை, அல்லது 3) அந்த சர்வரின் அமைப்பு இப்போது வேறாக இருக்கலாம்.

எனவே இந்த மின்னஞ்சல் முகவரியினை முழுமையாகச் சோதனை செய்திட வேண்டும். இதுவும் தீர்வு

"பைல்கள்"

.psp: போட்டோ ஷாப் போன்ற இன்னொரு இமேஜ் எடிட் புரோகிராமான Paint Shop Pro என்னும் புரோகிராமில் உருவான பைல்களுக்கு இந்த துணைப் பெயர் கிடைக்கும். இந்த புரோகிராம் சற்று விலை அதிகமானது. இந்த பைல்களையும் கன்வெர்டர் கொண்டு மாற்றலாம்.

தரவில்லை என்றால், அஞ்சல் முகவரிக்கானவரை, வேறு வழிகளில் தொடர்பு கொண்டு சரியான முகவரியினைப் பெறவும்.

3. Mail not accepted: பிழை எண் 550 அல்லது 554 ஆக இருக்கலாம். யாருக்கு இந்த அஞ்சலை அனுப்பு கிறீர்களோ, அவருக்கான இந்த முகவரிக்கு ஒரு சிலர் மட்டுமே அஞ்சலை அனுப்பும் வகையில் வரையறை செய்யப்பட்டிருக்கலாம். அல்லது ஒரு குழு மட்டுமே அனுப்பும் வகையில் இருக்கலாம். இந்த அமைப்பினை அவர் மாற்றினால் தான் இந்த முகவரியினைப் பயன்படுத்தி, அஞ்சல் அனுப்ப முடியும்.

4. Service Unavailable: சில வேளைகளில் இது 550 என்ற எண்ணுடன் இருக்கும். அல்லது எண் இல்லாமல் இருக்கும். தற்போதைக்கு, இந்த முகவரிக்கான சர்வர் அஞ்சல் எதனையும் ஏற்றுக் கொள்ளும் நிலையில் இல்லை; அல்லது பராமரிப்பு காரணமாக அஞ்சல் பெறுவது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கலாம். சில மணி நேரம் காத்திருந்த பின்னர், அஞ்சலை அனுப்பலாம்.

5. Sender's address rejected: பிழை எண் 550 அல்லது 554 ஆக இருக்கலாம். இது உங்களுக்கு ஒரு மோசமான செய்தி. உங்கள் முகவரியினை ஸ்பேம் மெயில் அனுப்பும் முகவரியாக, உங்கள் அஞ்சலைப் பெறுபவர் வரையறை செய்துள்ளார். அல்லது அவர் சார்ந்துள்ள குழு அது போல அமைத்திருக்கும். அவரை வேறு வழியில் தொடர்பு கொண்டு, கறுப்பு பட்டியலில் இருந்து உங்களின் முகவரியினை நீக்குமாறு கேட்டுக் கொள்ளலாம்.

"பைல்கள்"

.jpg: இது ஒரு பொதுவான இமேஜ் பைல் வடிவமாகும். இதன் பயன்பாடு இன்டர்நெட்டில் அதிகம். ஏனென்றால் இந்த துணைப் பெயர் கொண்ட இமேஜ் பைலின் அளவு மிகக் குறைவானதாக இருக்கும். இந்த பைலை உருவாக்க அதி நவீன பைல் கம்ப்ரஷன் தொழில் நுட்பம் பயன்படுத்தப்படுகிறது. பலவித இமேஜ் புரோகிராம் மூலம் இதனைத் திறந்து பார்க்கலாம். விண்டோஸ் பெயிண்ட் மற்றும் பிக்சர் மேனேஜர் தொகுப்பு இந்த வகை பைல்களைப் பார்க்க மிக எளிமையான புரோகிராமாகும்.

6.Inbox Full : சில வேளைகளில் 552 என்ற எண்ணுடன் இந்த பிழைச் செய்தி இருக்கலாம். குறிப்பிட்ட கால அவகாசத்தில், அஞ்சலைப் பெற வேண்டிய நபர், அதிக பட்ச மெயில்களைப் பெற்றிருக்கலாம். அவரின் அஞ்சல் பெறும் பெட்டியில் கொள்ளும் அளவிற்கு அஞ்சல்கள் பெறப்பட்டுள்ளதால், உங்கள் மெயில் திருப்ப அனுப்பப்பட்டுவிட்டது. எனவே மெயிலைப் பெற இருப்பவர், அவராக இந்த பாக்ஸில் உள்ள மெயில்களை நீக்கினால்தான், மேலும் அவருக்கு மெயில்கள் சென்றடையும்.

7.Message exceeds maximum file size: இந்த பிழைச் செய்தி சில வேளைகளில் 552 என்ற எண்ணுடன் தரப்படும். நீங்கள் உங்கள் அஞ்சலுடன் இணைத்துள்ள பைலின் அளவு, அனுமதிக்கப்பட்ட அளவை காட்டிலும் அதிகமானதாக இருப்பதாக பொருள். எனவே இணைக்கப்படும் பைலின் அளவை குறைக்க வேண்டும். அல்லது இணைப்பையே நீக்க வேண்டும். பைலின் அளவைக் குறைக்க இயலவில்லை என்றால், பைலை வேறு வழிகளில் அனுப்பலாம்.

வெளியாக பைல் மாற்றும் சேவைகள் தரும் பல தளங்கள் இதற்கென உள்ளன.

இன்னும் பல பிழைச் செய்திகளை, மின்னஞ்சல் அனுப்பும்போது நாம் பெறலாம். இருப்பினும் மேலே காட்டப்பட்டுள்ள செய்திகளே நாம் அடிக்கடி சந்திக்கும் செய்திகளாகும்.

"கவனத்திற்கு"

பயாஸ் (BIOS - Basic Input Output System) : அனைத்து பெர்சனல் கம்ப்யூட்டர்களின் மதர் போர்டிலும் இணைத்து அமைக்கப்பட்ட சிறிய புரோகிராம். ஸ்கிரீன், ஹார்ட் டிஸ்க், கீ போர்டு போன்ற அடிப்படை சாதனங்களைக் கட்டுப்படுத்தி இயக்கும் புரோகிராம். ஒரு கம்ப்யூட்டருக்கு மின்சக்தியை அளித்து இயக்குகையில் இந்த புரோகிராம் உடனே இயங்கி ஹார்ட் டிஸ்க், கீ போர்டு மற்றும் தேவயான சார்ந்த சாதனங்கள் எல்லாம் சரியான முறையில் அமைக்கப்பட்டுள்ளதா என்பதனைத் தேடிப் பார்த்து சரியான பின்னரே முழுமையாக இயக்கத்திற்கு வழி விடும். இல்லை என்றால் என்ன குறை என்பதனைத் தெரியப்படுத்தும்.

எப்போதும் மனதில்

கம்ப்யூட்டர் பயன்படுத்துவதில், நீங்கள் பெரிய வல்லுநரோ அல்லது புதியவரோ, முக்கிய விஷயங்கள் சிலவற்றை நாம் அனைவருமே அறிந்து கொள்ள வேண்டும். அவற்றில் சிலவற்றை இங்கு பார்ப்போம்.

1. இரண்டு கிளிக்: விண்டோஸ் சிஸ்டத்தில் இருமுறை கிளிக் செய்வது, பைல் ஒன்றைத் திறப்பதற்காக. ஆனால் இதனையே, இணைய தளம் ஒன்றில், இன்னொரு தளத்திற்கான லிங்க் தொடர்பின் மேல் கிளிக் செய்வதற்கோ, டயலாக் பாக்ஸில் கிளிக் செய்வதற்கோ பயன்படுத்தக் கூடாது. இதனால் தளம் இரண்டு டேப்களில் திறக்கப்படும்; அல்லது உங்களுடைய ஆப்ஷன் இரண்டு முறை அனுப்பப்படும். சிலர், படிவங்களில் தகவல்களை நிரப்பிவிட்டு, இறுதியில் அதனை அனுப்பும் Submit பட்டனில் இரண்டு முறை கிளிக் செய்வார்கள். இது இரண்டு விண்ணப்பங்களை அனுப்பிவிடும். எனவே எந்த இடத்தில் இரண்டு முறை கிளிக் செய்திட வேண்டுமோ, அங்கு மட்டுமே இருமுறை கிளிக் செய்திட வேண்டும்.

2.சரியான சாய்வுக் கோடு (Slash-backward and forward): கம்ப்யூட்டர் குறியீடுகளில் முன் மற்றும் பின் சாய்வுக் கோடு முக்கிய செயல்பாடுகளைக் கொண்டுள்ளது. இவற்றை மாற்றிப் பயன்படுத்துவது, விரும்பும் செயல் பாட்டினைத் தராது. \ என்பது பின் சாய்வுக் கோடு (backward). /என்பது முன் சாய்வுக் கோடு (forward). விண்டோஸ் இயக்கத்தில் உள்ள கோப்புகள் உள்ள இடங்களைச் சுட்டிக் காட்டி வழிகளை அமைக்கையில் பின் சாய்வுக் கோடுகள் பயன்படுத்தப்படுகின்றன. எ.கா. C:\Program Files\Whatever . இணைய முகவரிகளில் முன் சாய்வுக் கோடுகள் அமைக்கப்படுகின்றன. எ.கா.http://www.dinamalar.com

3. பிழைச் செய்தி பதிவு: சிஸ்டம் இயங்குகையில் பல வேளைகளில் பிழைச் செய்திகள் காட்டப்பட்டு, இயக்கம் முடங்கிப் போகும். இந்த பிழைச் செய்திகளை அலட்சியப்படுத்தாமல் அவற்றை எப்படியாவது குறித்து வைக்க வேண்டும். அதனை செலக்ட் செய்து டெக்ஸ்ட் பைல் ஒன்றில் ஒட்டி வைக்கலாம். தேர்ந்தெடுக்க

இயலாவிட்டால், அப்படியே இமேஜ் பைலாக சேவ் செய்து, பின்னர் அதனைப் பார்த்து மெசேஜ் என்னவென்று டைப் செய்து வைக்கலாம். இந்த பிழைக்கான தீர்வு காண முயற்சிக்கையில், சாப்ட்வேர் நிறுவனத்திற்கு இதனை அனுப்பிக் கேட்கலாம். அல்லது கூகுள் தேடலில் இதனை பேஸ்ட் செய்தால், இது போல பிரச்னை ஏற்பட்டவர்கள், அப்போது என்ன செய்தார்கள் என்ற விளக்கத்தினைப் பெறலாம்.

4. அழிந்த பைல் மீட்பு: கோப்பு ஒன்றை, கம்ப்யூட்டரில் இருந்து அழிக்கும் போது, அது அப்படியே அழிக்கப்படுவதில்லை. இந்த பைல் இங்கிருக்கிறது என்று கம்ப்யூட்டரின் சிபியுவிற்குச் சொல்லப்படும் இன்டெக்ஸ் குறியீடுதான் அழிக்கப்படுகிறது. இது அந்த பைல் இருக்கும் ஹார்ட் டிஸ்க் இடத்தைப் பின்னர் வேண்டும்போது மற்ற பைல்களுக்குப் பயன்படுத்தலாம் என்ற செய்தியைக் கம்ப்யூட்டருக்குத் தருகிறது. எனவே நாம் விரும்பாமல் ஏதேனும் பைல் ஒன்றை, ரீசைக்கிள் பின்னிலிருந்தும் எடுக்க முடியாத நிலையில் அழித்துவிட்டால், ஹார்ட் டிஸ்க்கிலிருந்து அதனைப் பெறலாம். இதற்கு ரெகுவா (Recuva) போன்ற பைல் மீட்கும் புரோகிராம்களைப் பயன்படுத்தவும்.

5. ஹார்ட் டிஸ்க்கை முழுமையாக அழிக்க: பயன்படுத்திய கம்ப்யூட்டரை மற்றவருக்குக் கொடுக்கிறீர்கள். அல்லது விற்கிறீர்கள். அப்போது ஹார்ட் டிஸ்க்கினை எடுத்து வைத்துக் கொள்வது நல்லது. பைல்களை அழித்துவிட்டுக் கொடுப்பதாக இருந்தால், முழுமையாக அவற்றை அழிக்க வேண்டும். ஏனென்றால், இதனைப் பெறும் மற்றவர்கள், அழிந்த பைல் மீட்டுத் தரும் புரோகிராம்கள் மூலம் உங்களின் பெர்சனல் தகவல்களைப் பெற்றுவிடும் வாய்ப்புகள் உள்ளன.

6. தேவையற்ற இன்ஸ்டால் : ஏதேனும் பயன்பாட்டு சாப்ட்வேர் புரோகிராம்களை உங்கள் கம்ப்யூட்டரில் பதியும்போது, அது தரும் கூடுதல் வசதிகளை இன்ஸ்டால் செய்திட வேண்டாம். பின்னர் எப்போது வேண்டுமானாலும், அந்த புரோகிராம் தரும் தளம் சென்று, பதிந்து கொள்ளலாம். ஏனென்றால், கூடுதல் வசதிகள் ஒவ்வொரு முறையும் புரோகிராமுடன் இயங்கத் தொடங்குகையில், அவை தொடங்க அதிக நேரம் எடுப்பதுடன், கம்ப்யூட்டரின் ஹார்ட் டிஸ்க்கில், ராம் மெமரியில் அதிக இடம் எடுக்கும். எனவே அப்ளிகேஷன் சாப்ட்வேர் ஒன்றை பதிந்து கொள்கையில், கூடுதல் வசதிக்கான செக் பாக்ஸ் மற்றும் ரேடியோ பட்டன்கள் தேர்ந்தெடுக்கப் பட்டிருந்தால், அவற்றை நீக்கி இன்ஸ்டால் செய்திடவும்.

7. கிளீனர்களை நம்ப வேண்டாம்: நாம் நம்பிக்கை வைத்திருக்கும் தளங்கள் சிலவற்றில், உங்கள் கம்ப்யூட்டரை சுத்தப்படுத்த, இந்த இடத்தில் கிளிக் செய்திடுங்கள் என சில லிங்க்குகள் இருக்கும். ரெஜிஸ்ட்ரியைச் சரி செய்திடலாமே! ஸ்பைவேர்களை எடுக்கவா, இலவசமாய்! என்று சில லிங்க்குகள் இருக்கும். பெரும்பாலான இந்த லிங்க்குகள் நமக்கு உதவி செய்வதைக் காட்டிலும், உபத்திரவம் தருவதாகவே அமையும். இக்கட்டில் மாட்டிவிட்டு, பணம் கட்டு என்று சொல்லும் தளங்களும் உள்ளன. எனவே இவற்றைப் பயன்படுத்துவதனை அறவே தவிர்க்கவும்.

8. தேவையற்றவற்றை நீக்குக: மிகவும் ஆசையாக சில அப்ளிகேஷன் சாப்ட்வேர்களைப் பதிந்து பயன்படுத்தி இருப்பீர்கள்.

"கவனத்திற்கு"

.CSV: ஒரு ஸ்ப்ரெட் ஷீட்டில் அமைக்கப்பட வேண்டிய தகவல்கள் காற்புள்ளிகள் என அழைக்கப்படும் கமாக்களால் பிரிக்கப்பட்டு பைலாக அமைக்கப் படுகையில் இந்த துணைப் பெயர் அந்த பைலுக்குக் கிடைக்கும். இதனை எக்ஸெல் புரோகிராமில் திறந்து பார்க்கலாம். அல்லது தகவல்களை சும்மா பார்த்தால் போதும் என எண்ணினால் எந்த வேர்ட் தொகுப்பு மூலமும் பார்க்கலாம்.

"பைல்கள்"

psd: அடோப் போட்டோ ஷாப் பயன்படுத்தி உருவாக்கப்படும் பைல்களுக்கு இந்த துணைப் பெயர் வழங்கப்படும். உங்களிடம் அடோப் போட்டோ ஷாப் இல்லை என்றால் பைல் வகை மாற்றத்திற்கு வழி செய்திடும் புரோகிராம் ஒன்றின் (Hercule Software's Graphic Converter) மூலம் இதன் பார்மட்டை மாற்றி, வேறு துணைப் பெயருடன் அதே பைலை உருவாக்கிப் பின் அதற்கான புரோகிராமில் திறக்கலாம். மேலே குறிப்பிடப்பட்ட மாற்றித்தரும் புரோகிராம் www.herculesoft.com என்னும் முகவரியில் கிடைக்கிறது.

காலப் போக்கில் அதன் மேம்படுத்தப் பட்ட அல்லது கூடுதல் வசதிகளுடன் கூடிய சில சாப்ட்வேர்களையும் இன்ஸ்டால் செய்திருப்பீர்கள். இந்நிலையில், பழைய சாப்ட்வேர்களை, கம்ப்யூட்டரிலிருந்து நீக்குவதே நல்லது. கண்ட்ரோல் பேனல் சென்று, Add/Remove Programs பிரிவின் மூலம் பழையனவற்றை நீக்கிவிடுங்கள்.

9: சிந்திய திரவம்: லேப்டாப் பயன்படுத்துபவர்கள் பலர் இந்த நெருக்கடிக்கு ஆளாவார்கள். லேப்டாப் பயன்படுத்திக் கொண்டே தண்ணீர், காபி, டீ என பானங்களைச் சாப்பிடுவார்கள். அப்படியே சில வேளைகளில் கவனமின்றி லேப்டாப் கம்ப்யூட்டர்களில் இது சிதறிவிடும். உடனே அதனை இணைத்திருக்கும் பவர் ப்ளக்கை நீக்கவும். பவர் ப்ளக்கில் இல்லை என்றால், கம்ப்யூட்டர் உள்ளே இருக்கும் பேட்டரியை நீக்க வேண்டும். இதனுடன் இணைக்கப்பட்டிருக்கும் அனைத்து சாதனங்களையும், வெப் கேமரா, யு.எஸ்.பி. போர்ட்டில் உள்ள ட்ரைவ் போன்றவை, நீக்க வேண்டும். உடனே லேப்டாப்பினைத் தலைகீழாக கவிழ்த்து அந்த திரவத்தினை வெளியே கொண்டு வரும் முயற்சியில் இறங்க வேண்டாம். நல்ல உறிஞ்சும் தன்மையுடைய துணி கொண்டு, ஒற்றி எடுக்க முயற்சிக்கலாம். லேப்டாப்பினை வெவ்வேறு திசைகளில் அசைப்பதன் மூலம், மேலே உள்ள திரவம் இன்னும் உள்ளே போகும் வழியை அமைக்கிறீர்கள்.

10. அட்மின் அக்கவுண்ட்: பெரும்பாலான எக்ஸ்பி சிஸ்டம் பயனாளர்கள், அவர்களின் அட்மினிஸ்ட் ரேட்டர் அக்கவுண்ட்டிலேயே, தொடர்ந்து கம்ப்யூட்டரில் பணிபுரிவார்கள். கம்ப்யூட்டர்களில் மாற்றங்கள் ஏற்படுத்த, இந்த அக்கவுண்ட் வழி செல்ல வேண்டும் என்றாலும், மற்ற நேரங்களில் வேறு ஒரு அக்கவுண்ட் வழி சென்று பயன்படுத்தலாம். ஏனென்றால், அட்மின் அக்கவுண்ட் வைரஸ்களை எளிதில் உள்ளே வரவழைக்கும்.

"பைல்கள்"

gif: இதுவும் மிகவும் பிரபலமான ஒரு இமேஜ் வகை பைல் ஆகும். இதனையும் விண்டோஸ் எக்ஸ்புளோரர் கொண்டு திறந்து பார்ப்பது எளிது.

11. சிஸ்டம் ட்ரே கிளீன்: உங்களுடைய டாஸ்க்பாரின் வலது பக்கம் சிஸ்டம் ட்ரேயில் பல ஐகான்கள் உள்ளனவா? இவை எல்லாம் உங்களைக் கேட்காமலேயே இயங்கிய புரோகிராம்களின் தடங்கள். இவை எல்லாம் கம்ப்யூட்டர் இயங்கத் தொடங்குகையில், நீங்கள் அறிந்தோ அறியாமலோ இயக்கப்பட்டுப் பின்னணியில் இருக்கும். இங்கிருக்கும் புரோகிராம்கள் தேவையா என சிறிய கால இடைவெளியில் பார்த்துத் தேவைப்படாதவற்றை நீக்கவும். கண்ட்ரோல் பேனலில் Notification Area Icons என்ற பிரிவைத் தேர்ந்தெடுக்கவும். இதில் கீழாகவுள்ள Always show all icons and notifications on the taskbar என்ற பிரிவில் செக் பாக்ஸில் உள்ள டிக் அடையாளத்தை ஏற்படுத்தவும். இதன் மூலம் உங்கள் சிஸ்டம் ட்ரே எவ்வளவு கூட்டமாக இருக்கிறது என்று தெரியவரும். இதில் தேவைப்படாத ஐகான் மீது ரைட் கிளிக் செய்து, கிடைக்கும் மெனுவில் Close என்ற பிரிவில் கிளிக் செய்திடவும். அந்த குறிப்பிட்ட புரோகிராம், இயக்கத்தில் இருந்து நீக்கப்படும். உங்கள் கம்ப்யூட்டரின் ராம் மெமரி இதற்காக உங்களுக்கு நன்றி சொல்லும்.

12. மின் சிக்கனம்: லேப்டாப் பயன்படுத்துபவராக இருந்தால், உங்கள் பேட்டரியின் திறனைச் சற்று சிக்கனமாகப் பயன்படுத்தலாமே. இதற்கான Power Settings அமைப்பில் சில மாற்றங்களை ஏற்படுத்துங்கள். கண்ட்ரோல் பேனலில் Power Options என்ற பிரிவைத் தேர்ந்தெடுக்கவும். இதில் பல ஆப்ஷன்கள் தரப்பட்டிருப்பதனைக் காணலாம். உங்கள் லேப்டாப் பயன்பாட்டிற்கேற்ப, இதில் விருப்பங்களைத் தேர்ந்தெடுத்துப் பயன்படுத்தவும்.

"கவனத்திற்கு"

ஆஸ்பெக்ட் ரேஷியோ (Aspect Ratio): ஒரு டிவியின் அல்லது மானிட்டரின் திரையின் அகல உயர விகிதத்தை ஆஸ்பெக்ட் ரேஷியோ என்கிறோம். வழக்கமான டிவிக்களின் திரை 4:3 என்ற விகிதத்தில் அமைந்திருக்கும். அதாவது 4 பங்கு அகலம் 3 பங்கு உயரம். தற்போது வருகின்ற புதிய ஸ்கிரீன்கள் 16:9 என்ற விகிதத்தில் அமைக்கப்படுகின்றன.

நினைவகம் வினாடி-வினா

கம்ப்யூட்டர், நினைவகம் இல்லாமல் செயல்பட முடியாது. இதில் உள்ள நினைவக வகைகளை எல்லாரும் அறிந்திருப்பதில்லை. ஆனால் அறிந்து கொள்வது, கம்ப்யூட்டரைப் பயன்படுத்துவதில் உள்ள தயக்கத்தினை விடுவித்து, சிறப்பாக அதனைப் பயன்படுத்த வழி வகுக்கும். நினைவகம் குறித்த தகவல்களை நாம் எந்த அளவிற்கு தெரிந்து வைத்திருக்கிறோம் என அறிய இந்த வினாடிவினா தரப்படுகிறது. ஒவ்வொரு கேள்விக்கும் தரப்படும் விளக்கம் நம் நினைவக அறிவை வளர்க்கும்.

1. எந்த வகை கம்ப்யூட்டர் மெமரி நிலையானதும், மாறா நிலை கொண்டதுமான தன்மையுடையது?

A. RAM, B.ROM, C.Cache

B. ROM எனப்படும் Read Only Memory . இதனைப் படிக்கத்தான் முடியும். இந்த நினைவகத்தில் உள்ள தகவல்களை மாற்றி எழுத முடியாது. இது ஒரு புரோகிராம் செய்யப்பட்ட மின் சுற்று. மின் சக்தி இந்த சுற்றுக்குச் செல்வதை நிறுத்தினாலும், புரோகிராம் மூலம் பதியப்பட்ட தகவல்கள் மாறா நிலையில் இருக்கும்.

2. கம்ப்யூட்டரின் நினைவகங்களின் அடுக்கில், டேட்டா முதலில் எந்த நினைவகத்திற்குச் செல்லும்?

A. RAM, B.ROM, C. BIOS

A. RAM. மவுஸ் அல்லது கீ போர்டாக வெளி சாதனமாக இருந்தாலும், அல்லது கம்ப்யூட்டரின் உள்ளிடத்திலிருந்து வரும் டேட்டாவாக இருந்தாலும், அவை RAM ஐத்தான் முதலில் அடையும்.

3. BIOS என்பது எதனைக் குறிக்கிறது?

A. Biological Internet Operating System

B. Binary Inner/Outer Stages

C. Basic Input Output System.

C. Basic Input Output System கம்ப்யூட்டருக்கான அடிப்படைத் தகவல்களை இது முதலில் கம்ப்யூட்டரின் சிபியுவிற்கு அனுப்புகிறது. கம்ப்யூட்டரில் எங்கு டேட்டா ஸ்டோர் செய்யப்படுகிறது, எந்த வரிசையில் கம்ப்யூட்டர் பூட் ஆகிறது, சிஸ்டத்தின் பாதுகாப்பு கட்டமைப்பு மற்றும் சில அடிப்படைத் தகவல்களை இது அனுப்பும்.

4. ஒரு கம்ப்யூட்டரின் செயல் வேகம் குறையும் போது, மெமரியின் எந்த பகுதி அதிக வேலையைப் பெறுகிறது?

A. RAM, B.ROM, C. Flash Memory

A. RAM. கம்ப்யூட்டர் புரோகிராம்கள் மற்றும் ஆப்பரேட்டிங் சிஸ்டம் RAM மெமரியில் தான் லோட் செய்யப்படுகின்றன. எனவே ஒரே நேரத்தில், பல புரோகிராம்களின் செயல்பாடுகள் மேற்கொள்ளப் பட்டால், ராம் நினைவகம் அதிக வேலைப் பளுவினைப் பெறுகிறது. இதனால் கம்ப்யூட்டரின் செயல் வேகம் குறையும். சில வேளைகளில் தவறான செயல்பாடு கூட ஏற்பட வாய்ப்பு ஏற்படும்.

5. Clock Cycle என்பது என்ன?

அ. கம்ப்யூட்டரின் கடிகாரத்தின் துல்லிய தன்மை

ஆ. சிபியுவின் செயலாற்றும் வேகம்

இ. பூட் செய்த பின்னர், மெமரியில் இருந்து சிலவற்றைப் பெற்று, கம்ப்யூட்டர் தன் செயல்பாட்டினை மீளப் பெற எடுக்கும் கால அவகாசம்.

ஆ. சிபியுவின் செயலாற்றும் வேகம். இது hertz என்ற அலகினால் அளக்கப்படுகிறது. இப்போதைய ப்ராசசர்கள் கிகா ஹெர்ட்ஸ் என்ற அதிவேக அளவில் செயல்படுகின்றன.

6. Memory Cache என்பது என்ன?

அ. ஒரு குறிப்பிட்ட பணியை மேற்கொள்ள கம்ப்யூட்டருக்கு ஒதுக்கப்பட்ட நினைவக இடம்.

ஆ. இப்போது பயனற்ற நிலையில் உள்ள மெமரி சாதனம்

இ. தற்காலிக நினைவக இடம். உடனடியாகச் செயலாற்ற சில டேட்டாக்கள் இங்கு தங்கவைக்கப்படும்.

இ. இது டேட்டா தருவதற்கான ஒரு தற்காலிக நினைவக இடம். சிபியுவின் செயல் வேகம் மிக அதிகமாக இருக்கையில், RAM மெமரியிலிருந்து வழங்கப்படும் டேட்டா பற்றாக்குறையாக ஆகிவிடும். இந்நிலையில் Cache Memory உதவுகிறது. இதில் தற்காலிகமாகத் தகவல்கள் சேமிக்கப்படுகின்றன. இதனால், RAM மெமரி செல்லாமல், சிபியு கேஷ் மெமரியிலிருந்தே தனக்கு வேண்டிய தகவல்களை எடுத்துக் கொள்கிறது. இதனால் RAM மெமரியிலிருந்து டேட்டா எடுக்கப்படும் நேரம் மிச்சமாகிறது. கம்ப்யூட்டரின் சிபியு வேகமாகச் செயல்பட முடிகிறது.

7. கம்ப்யூட்டர் உலகில் Bus Width என்பது எதனைக் குறிக்கிறது?

அ. கம்ப்யூட்டரை ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு எடுத்துச் செல்கையில் பயன்படுத்தும் வாகனத்தின் அளவு.

ஆ. கம்ப்யூட்டர் போர்ட்டில் உள்ள பின்களின் எண்ணிக்கை

இ. சிபியுவிற்கு ஒரே நேரத்தில் அனுப்பப்படும் தகவல் பிட்(Bit)களின் எண்ணிக்கை

இ. கம்ப்யூட்டர் சிஸ்டத்தின் ராம் மெமரியின் வேகம் இரண்டு செயல்பாடுகளில் அடிப்படையில் உள்ளது. அவை Bus Width மற்றும் Bus Speed. இதில் Bus Width என்பது சிபியுவிற்கு RAM எந்த அளவில் தகவல்களை அனுப்ப முடியும் திறன் கொண்டதாய் உள்ளது என்பதைக் காட்டுகிறது.

8. கம்ப்யூட்டர் ஒன்று தன் பணியினைத் தொடங்குகையில் எந்த மெமரி முதலில் இயங்கத் தொடங்குகிறது?

A. RAM, B.ROM, C. BIOS

C. BIOS கம்ப்யூட்டர் பூட் ஆகும்போதே, BIOS தான் முதலில் இயங்கி கம்ப்யூட்டர் குறித்த அடிப்படைத் தகவல்களைத் தருகிறது.

டிவிஎஸ் கீ போர்டில் ரூபாய்க்கான தனி கீ

கீ போர்டு வடிவமைத்து விற்பனை செய்வதில், முன்னணியில் இயங்கும் டிவிஎஸ் நிறுவனம், அண்மையில் டிவிஎஸ் கோல்டு பாரத் என்னும் பெயரில் கம்ப்யூட்டருக்கான கீ போர்டு ஒன்றினை வடிவமைத்துள்ளது. இதில், அண்மையில் அரசால் அறிவிக்கப்பட்ட ரூபாய்க்கான தனி கீ தரப்பட்டுள்ளது. டிவிஎஸ் கீ போர்டுகளில் மெக்கானிக்கல் கீகள் பயன்படுத்தப்படுகின்றன. இவை ஐந்து கோடி முறை பயன்படுத்தப்படலாம் என்ற உத்தரவாதம் தரப்படுகிறது. இந்த கீ போர்டுகள், விண்டோஸ் மற்றும் லினக்ஸ் சிஸ்டத்துடன் பயன்படுத்தும் வகையில் வடிவமைக்கப் பட்டுள்ளன. இவற்றில் டிவிஎஸ் கோல்டு இரு மொழி கீ போர்டுகள் தமிழ், தெலுங்கு, மராத்தி, வங்காளம், கன்னடம், மலையாளம், குஜராத்தி மற்றும் அசாமிய மொழிகளைப் பயன்படுத்து வதற்கேற்ப உருவாக்கப்பட்டுள்ளன.

இந்த கீ போர்டினை USB and PS/2 என இரண்டு வகை முகப்புகள் மூலமாகவும் கம்ப்யூட்டரில் இணைத்துப் பயன்படுத்தலாம் என்று இந்நிறுவனம் அறிவித்துள்ளது. இதன் விலை ரூ.1,495.

நீளமான இமெயில் முகவரி

கம்ப்யூட்டர் சொந்தமாக வைத்துப் பயன்படுத்துகிறோமோ இல்லையோ, இந்த தகவல் பறக்கும் காலத்தில், ஒவ்வொருவரும் தங்களுக்கென சொந்தமாக ஒன்றுக்கும் மேற்பட்ட மின்னஞ்சல் முகவரியினைக் கொள்வது வாடிக்கையாகிவிட்டது. அவசரத்திற்குத் தகவல் அனுப்பவும் பெறவும் இது வழியைத் தருகிறது. மேலும் இது இப்போது இலவசமாகவும் பல இணைய தளங்களில் கிடைக்கிறது.

உலகிலேயே மிக நீளமான மின்னஞ்சல் முகவரியை யார் கொண்டுள்ளார்கள் என்று அறிய ஆவலாய் இருந்தது. இணையத்தில் தேடியபோது, உலக அளவில் இது போல பல சாதனைகளை மேற்கொண்டுள்ள ஆஸ்திரேலியர் ஒருவர் நீளமான மின்னஞ்சல் முகவரியைக் கொண்டுள்ளது தெரிந்தது. அவர் பெயர் பீட்டர் கிரெய்க். இவரின் மற்ற சாதனைகள் டேபிள் டென்னிஸ் மட்டையில் பந்தைத் தட்டுவது, கால் பந்தை அதே போலப் பயன்படுத்துவது, நூல் நூற்பது, ஒற்றைக் காலில் நிற்பது போன்றவை. இவரின் உலக சாதனைகள் 41.



இவரின் மின்னஞ்சல் முகவரியில் 345 குறியீடுகள் உள்ளன. முகவரி contact-admin-hello-webmaster-info-services-peter-crazy-but-oh-so-ubber-cool-english-alphabet-loverer-abcdefghijklmnopqrstuvwxyz@please-try-to.send-me-an-email-if-you-can-possibly-begin-to-remember-this-coz.this-is-the-longest-email-address-known-to-man-but-to-be-honest.this-is-such-a-stupidly-long-sub-domain-it-could-go-on-forever.pacraig.com

மேலும் தகவல்களுக்கு http://urdb.org/user/PeterCraig மற்றும் http://laughingsquid.com/the-worlds-longest-active-email-address/ என்ற முகவரிகளில் உள்ள தளங்களைக் காணவும்.

இந்த சாதனை குறித்து இணைய தளத்தில் தேடுகையில், இன்னொருவர் இதனை முறியடித்துள்ளதாகத் தகவல் வந்தது. ஸாக்கரி ரெய்டல் (Zachary Reidell) என்ற அமெரிக்க நாட்டவர் தன் மின்னஞ்சல் முகவரியில் 411 குறியீடுகளைக் கொண்டுள்ளார். அவரின் மின்னஞ்சல் முகவரி: hi-this-is-the-longest-email-in-the-world-and-is-much-superior-to-contact-



admin-hello-webmaster-info-services-peter-crazy-but-oh-so-ubber-cool-english-alphabet-loverer-abcdefghijklmnopqrstuvwxyz-at-please-try-to.send-me-an-email-if-you-can-possibly-begin-to-remember-this-coz.this-is-the-longest-email-address-known-to-man-but-to-be-honest.this-is-such-a-stupidly-long-sub-domain-it-could-go-on-forever@zchr.org

இந்த இரண்டு முகவரிகளும் இவ்வளவு நீளமாக இருப்பதால், செயல்படுகிறதா என்று பார்க்க, தினமலர் சார்பில் இவர்களுக்கு மின்னஞ்சல் அனுப்பப்பட்டது. பீட்டர் கிரெய்க் முகவரியில் சிறிது பிரச்னைகள் இருப்பதாக, பிழைச் செய்தி கிடைத்தது. அது வெட்டி ஒட்டுவதில் ஏற்பட்ட மாற்றங்கள். அவற்றைச் சரி செய்த பின் செய்தி சென்றது. ஆனால் இரண்டு நாட்கள் கழித்து, முகவரியில் உள்ள சர்வரை அடைய முடியவில்லை என்று ஜிமெயில் கூறியது. அவரின் மிகச் சிறிய முகவரிக்கு செய்தியை அனுப்பிய போது, பெரிய முகவரி சில சர்வர்களில் வேலை செய்யவில்லை என்று கூறி, நமக்குப் பதில் அனுப்பி உள்ளார்.

இரண்டாவது முகவரிக்கு செய்தி சென்று, அமெரிக்கரான ஸாக்கரி ரெய்டல் நன்றி கூறி பதில் மின்னஞ்சல் அனுப்பினார். அவர் பதில் அஞ்சல் அனுப்ப, அவரின் ஜிமெயில் முகவரியைப் பயன்படுத்தினார்.

நீளமான மின்னஞ்சல் முகவரியைப் பார்த்தோம். மிகச் சிறிய முகவரி எது? இதற்கான தளம் ஒன்று உள்ளது என கூகுள் தன் விளம்பரத்தில் தெரிவித்துள்ளது. அது www.in.com. இது மின்னஞ்சல் சேவை மட்டுமின்றி 10 ஜிபி இலவச இடம், மின்னஞ்சல்களை நாள் குறித்து அனுப்பும் வசதி, ஸ்பேம் மற்றும் வைரஸ் எதிரான பாதுகாப்பு ஆகியவற்றையும் தருகிறது.யாஹூ, ஜிமெயில் மற்றும் பிரபல தளங்கள் தரும் வசதிகளில் பெரும்பாலான வசதிகள் இதிலும் கிடைக்கிறது.

இந்த தளத்தை அமைத்துத் தரும் நிறுவனத்தின் பெயர் Web18 Software Services Limited. இதன் தளம் சென்று மிகச் சிறிய மின்னஞ்சல் முகவரியினை அமைத்துக் கொள்ளலாம். பிரச்னை என்னவென்றால் இப்போது யூசர் பெயரில் குறைந்தது நான்கு எழுத்துக்கள் இருக்க வேண்டும் என இந்த தளம் கட்டாயப்படுத்துகிறது. எனவே உங்கள் இந்த தளம் தரும் முகவரி குறைந்த அளவில் இருந்தாலும் அது xxxx@in.com என்று தான் இருக்கும். மொத்தம் 11 குறியீடுகள் இருக்கும்.

AOL.IN என்ற தளமும் மின்னஞ்சல் சேவையினைத் தருகிறது. இதில் 10 குறியீடுகள் உள்ள முகவரியினைக் கொள்ளலாம்.

இன்னும் குறைவான குறியீடுகளீல் மின்னஞ்சல் முகவரி வேண்டுமாயின், நீங்கள் செல்ல வேண்டிய தளம் ஒரு எப்.எம். ரேடியோ தளமாகும். இதன் முகவரி http://1to.in. இது பல எப்.எம். ரேடியோ தளங்களுக்கான, பாடல்களுக்கான ரேடியோ பட்டன்களைக் கொண்டிருக்கும். இதில் நாம் விரும்பும் பாடலைக் கிளிக் செய்து, ஆடியோ பைல சேவ் செய்திடலாம்; அல்லது உடனே இசைக்கச் செய்து கேட்கலாம். இதில் ரசிகராக மாற, இந்த தளம் இலவச இமெயில் முகவரி தருகிறது. ஒரெழுத்தில் கூட முகவரி இருக்கலாம். எனவே x@1to.in என்ற வகையில் உங்கள் முகவரி அமையும். ஆனால் இது மின்னஞ்சல் சேவை தரும் தளம் அல்ல என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். (இதில் ஒரெழுத்து தந்து பார்த்த போது அனைத்தும் பயன்படுத்தப்பட்டதாக செய்தி வந்தது. எனவே இரண்டு எழுத்தில் ஒன்றை நான் அமைத்துக் கொண்டேன்.)

விரைவில் இந்திய மொழிகளில், தமிழ் உட்பட, மின்னஞ்சல் முகவரிகள் அமைக்க வசதி தரப்படும். அப்போது நாம் நமக்குள் நீளமான, சிறிய முகவரிகள் அமைக்கும் போட்டியை வைத்துக் கொள்ளலாம்.

15ஆவது ஆண்டில் இன்டர்நெட் எக்ஸ்புளோரர்

சென்ற ஆகஸ்ட் 16ல் தன் பதினைந்தாவது பிறந்த நாளை இன்டர்நெட் எக்ஸ்புளோரர் கொண்டாடியுள்ளது. நிறுவனங்கள் பயன்பாடு, விண்டோஸ் சிஸ்டத்துடன் இணைந்து தரப்படுவது போன்ற பல கூறுகளால், இன்னும் தன் முதல் இடத்தைப் பிரவுசர் சந்தையில் தக்கவைத்துள்ள இந்த பிரவுசர், இதற்கென தொடர்ந்து மேற்கொண்டு வரும் போராட்டம் கவனிக்கத்தக்கதாகும்.

2001 ஆம் ஆண்டில் விண்டோஸ் எக்ஸ்பி அறிமுகப்படுத்தப்பட்ட போது, மைக்ரோசாப்ட் இன்டர்நெட் எக்ஸ்புளோரர் குறித்த தன் நடவடிக்கை களில் சிறிது மந்த நிலையை மேற்கொண்டது. அந்த இடைப்பட்ட காலத்தில் பயர்பாக்ஸ் பிரவுசர் வெளியாகி, நல்லதொரு இடத்தைப் பிடித்துக் கொண்டது. தொடர்ந்து கூகுளின் குரோம் பிரவுசரும் வெளியாக, இன்டர்நெட்

இன்டர்நெட் எக்ஸ்புளோரர் வரலாறு

1995: இன்டர்நெட் எக்ஸ்புளோரர் 1.0
விண்டோஸ் 95 வந்த பின் ஒரு மாதம் கழித்து "Internet Jumpstart Kit" என அறிமுகப்படுத்தப்பட்டது. ஆப்பரேட்டிங் சிஸ்டத்தின் ஒரு பகுதியாக வெளியாகவில்லை.

1995: இன்டர்நெட் எக்ஸ்புளோரர் 2.0.
அந்த ஆண்டு நவம்பரில் வெளியானது. மேக் மற்றும் விண்டோஸ் ஆகிய இரு சிஸ்டங்களையும் இது சப்போர்ட் செய்தது.

1996: இன்டர்நெட் எக்ஸ்புளோரர் 3.0.
1996 ஆகஸ்ட்டில் வெளியானது. இமெயில் சப்போர்ட் தரப்பட்டது. இமேஜ் பைல்கள் காட்டப்பட்டன. ஆடியோவும் இதிலேயே இயக்கப்பட்டது.

1997: இன்டர்நெட் எக்ஸ்புளோரர் 4.0.
வாடிக்கையாளர்களுடன் தகவல் சேர்க்கும் வகையில், இன்ட்ராக்டிவ் இணைய தளங்கள் சப்போர்ட் செய்யப்பட்டன. மைக்ரோசாப்ட் அவுட்லுக் எக்ஸ்பிரஸ் 4.0. இமெயில் சேவையை வழங்கும் வகையில் வெளியானது.

1998: இன்டர்நெட் எக்ஸ்புளோரர் 5.0.
தொழில் நுட்ப ரீதியாகச் சில திறன்கள் மேம்பாடடைந்தன.

2001: இன்டர்நெட் எக்ஸ்புளோரர் 6.0.
விண்டோஸ் ஆப்பரேட்டிங் சிஸ்டத்தின் ஒரு பகுதியாக வெளியானது. பல ஆண்டுகள் இதன் கூறுகளே, பிரவுசர் ஒன்றின் வரையறைக்கப்பட்ட கூறுகளாக இருந்து வந்தன.

2006: இன்டர்நெட் எக்ஸ்புளோரர் 7.0.
2006 அக்டோபர் மாதம் வெளியானது. விண்டோஸ் சர்வீஸ் பேக் 2 பயன்படுத்துபவர்களுக்கென உருவாக்கப்பட்டு கிடைத்தது. பின்னர் விஸ்டாவின் ஒரு பகுதியானது. டேப் பிரவுசிங் வசதி தரப்பட்டது.

2009: இன்டர்நெட் எக்ஸ்புளோரர் 8.0.
மார்ச், 2009ல் வெளியானது. தன் பிரவுசிங் இன் ஜினை, நவீன தொழில் நுட்பத்தின் அடிப்படையில் உருவாக்கியது மைக்ரோசாப்ட். இந்த பிரவுசரின் ஒரு பகுதி விண்டோஸ் 7 சிஸ்டத்தின் ஒரு பகுதியானது.

2011? இன்டர்நெட் எக்ஸ்புளோரர் 9.0.
பெரிய அளவிலான அடுத்த அப்டேட் இதுவாகத்தான் இருக்கும். எச்.டி.எம்.எல்.5 தொழில் நுட்பத்திற்கான மேம்படுத்தப்பட்ட சப்போர்ட் தரப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. வேகமாக இயங்கும் ஜாவா ஸ்கிரிப்ட் இன் ஜின் கிடைக்கும். கம்ப்யூட்டரின் கிராபிக்ஸ் சிப்பின் திறனைப் பெற்று, டெக்ஸ்ட் மற்றும் கிராபிக்ஸ் திறனை மேம்படுத்திக் காட்டப்படும் வசதிகள் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

எக்ஸ்புளோரர் தன் இடத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக மற்றவர்களுக்குத் தரத் தொடங்கியது. இதனால் தன் 15 ஆவது பிறந்த நாளைக் கொண்டாடும் இந்த மாதத்தில், பிரவுசர் சந்தையின் முதல் ஹீரோவாக இருந்தாலும், சுற்றிலும் பல போட்டியாளர்களைச் சந்திக்கும் நிலையிலேயே இ.எ. பிரவுசர் உள்ளது. ஜூலை இறுதியில் இ.எ. பிடித்துள்ள இடம் 60%; பயர்பாக்ஸ் 23%, குரோம் 7% மற்றும் சபாரி 5%.

கூகுள் தன் பிரவுசரான குரோம் தொகுப்பின் தன்மையை வேறு எந்த பிரவுசரும் கொண்டிருக்கவில்லை என்று பெருமைப்படுகிறது. இணைய வழி சேவைகள் என்று பார்க்கையில் கூகுள் தான் மிக அதிகமாக சேவைகள் தருவதாகவும், அதனாலேயே இதன் பிரவுசர் தனித்தன்மை கொண்டிருப்பதாகவும் கூறியுள்ளது. குரோம் ஆப்பரேட்டிங் சிஸ்டத்தின் அடிப்படையில் நெட்புக் கம்ப்யூட்டர்கள் வெளியாகும்போது, இந்த உண்மை தெரியவரும் என்றும் தெரிவித்துள்ளது.

இதனைச் சமாளிக்கும் வகையில் இ.எ. பிரவுசர் பதிப்பு 9 வெளியாக உள்ளது. தற்போதைய கம்ப்யூட்டர்களில் முக்கிய இடத்தைக் கொண்டிருக்கும் கிராபிக்ஸ் பயன்பாட்டினை இன்டர்நெட் எக்ஸ்புளோரருடன் இணைத்து, இதன் வலிமையை நிரூபிக்க இருப்பதாக அறிவித்துள்ளது. இதனை உறுதிப்படுத்தும் வகையில் சில சோதனைப் பதிப்புகளையும் காட்டியுள்ளது.

இந்நிலையில் ஒரு கேள்வி நம் மனதில் எழுகிறது. எது முக்கியம்? ஆப்பரேட்டிங் சிஸ்டமா? பிரவுசரா? மைக்ரோசாப்ட் எப்போதும் ஒரு பிரவுசர், ஆப்பரேட்டிங் சிஸ்டத்தின் ஒரு பகுதியாகவே இருக்க வேண்டும் என்ற கருத்தினை வெளியிட்டு வருகிறது. இங்கு தான் பிரச்னையே எழுகிறது. ஏன் மைக்ரோசாப்ட் இந்த நிலையை எடுக்கிறது என்று பார்க்கலாம்.

இன்டர்நெட் எக்ஸ்புளோரர் தொகுப்பு 1995 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 16ல் வெளியானது. தன் விண்டோஸ் 95 தொகுப்பினை வெளியிட்டு ஒரு மாதம் கழித்து இந்த பிரவுசரை வெளியிட்டது. விண்டோஸ் 95 சிஸ்டத்தின் ஆட் ஆன் தொகுப்பாகத் தந்தது. இணையத்தின் வலிமையை, திறனைத் தான் தெரிந்து கொண்ட தாகவும், அதனால் தன் அனைத்து சாதனங்களிலும், இணையப் பயன்பாட்டினை இணைக்க இருப்ப தாகவும் அறிவித்தது. அப்போது பிரவுசர் உலகில் கொடி கட்டிப் பறந்த நெட்ஸ்கேப் பிரவுசரை, இன்டர்நெட் எக்ஸ்புளோரரால் உடனே வெளியே தள்ள முடியவில்லை. 1997 ஆண்டு, முதல் ஆறு மாதம் வரை இ.எ. பிரவுசர் 50% இடத்தை மட்டுமே கொண்டிருந்தது.

இன்டர்நெட் எக்ஸ்புளோரர் பதிப்பு 3, விண்டோஸ் ஆப்பரேட்டிங் சிஸ்டத்துடன் இணைக்கப்பட்டு வெளியானபோதுதான், இ.எ. பிரவுசருக்கு நல்ல காலம் ஏற்பட்டது. உடனே இது போல இணைத்துத் தருவது, நிறுவனக் கொள்கைகளைக் காற்றில் பறக்க விடுவதாகும், எல்லை மீறிய செயல் என்று அப்போது ஐரோப்பிய கூட்டமைப்பு வழக்கு தொடுத்தது. சென்ற ஆண்டு தான் இந்த வழக்கு முடிவு மைக்ரோசாப்ட் நிறுவனத்தைத் தண்டிக்கும் வகையில் வெளியானது.

ஐரோப்பிய நாடுகளில் மட்டும் தன் பிரவுசரைக் காட்டாமல் இருக்கப்போவதாக, மைக்ரோசாப்ட் அச்சுறுத்திப் பார்த்தது. இறுதியில் மற்ற பிரவுசர்களையும் வாடிக்கையாளர்கள் விரும்பினால், டவுண்லோட் செய்து பயன்படுத்த வழிகளைத் தருவதாக அறிவித்தது.

நெட்ஸ்கேப் பிரவுசரைப் பின்னுக்குத் தள்ளி, இருக்கும் இடம் காணாமல் ஆக்கியபின், மைக்ரோசாப்ட் சற்று நிதான போக்கினைக் கடைப்பிடித்தது. அடுத்த புதிய வசதிகள், இ.எ. பதிப்பு 6ல் தான் தரப்பட்டது. இந்த வேளையில் பயர்பாக்ஸ் டேப் பிரவுசிங் உட்பட பல புதிய வசதிகளை அறிமுகப்படுத்தியது. இது போன்ற சில புதுமைகள் எதனையும் தராததால், இன்டர்நெட் எக்ஸ்புளோரர் சற்றுத் தள்ளாடியது.

இதனால், தன் இ.எ. பிரவுசர் பதிப்பு 8 மற்றும் பதிப்பு 9ல், இன்டர்நெட் உலகம் எதிர்பார்க்கும் நவீன வசதிகளைத் தர முனைந்து செயல்பட்டது. தொடர்ந்து இந்த முயற்சிகளை மூடுக்கிவிட்டுள்ளது.

இந்த வார டவுண்லோட்

குறிப்பிட்ட தளங்களை மட்டும் தனிப்பார்வையில்

அனைத்து பிரபலமான பிரவுசர்களும், இப்போது, பிரைவேட் பிரவுசிங் எனப்படும் தனிப்பட்ட உலா என்ற வழிவகையினைத் தந்துள்ளன. பிரைவேட் மோட் மற்றும் இன் காக்னிடோ என இவை பிரவுசருக்கேற்றபடி அழைக்கப்படுகின்றன. இந்த வகையில் இணைய உலா வருகையில், நாம் காணும் தளங்களின் பெயர்கள், பிரவுசரில் பதிவு செய்யப்பட மாட்டாது. இதன் மூலம் நாம் பொதுவான கம்ப்யூட்டர் மையங்களில் நாம் இணையத்தில் தளங்களைப் பார்க்கையில், எந்த தளங்களைப் பார்த்தோம் என மற்றவர்கள் அறிய முடியாது.

எனவே வழக்கம்போல பிரவுசரை இயக்கிச் சில தளங்களைப் பார்த்த பின், பிரைவேட் பிரவுசிங் வேண்டும் என விரும்பினால், மீண்டும் முதலில் இருந்து, பிரவுசர் இயங்கத் தொடங்கும். இந்த வகையில் குரோம் பிரவுசர் இன்னும் ஒரு படி மேலே போய், சில குறிப்பிட்ட தளங்களை, எப்போதும் பிரைவேட் பிரவுசிங் என்ற முறையில் காணும்படி செட் செய்திடும் வழியினைத் தந்துள்ளது. கூகுளின் குரோம் பிரவுசரைப் பொறுத்த வகையில் இந்த வகை இணைய உலா Incognito Mode என அழைக்கப்படுகிறது என்பது நீங்கள் அறிந்ததே. குறிப்பிட்ட தளங்களைக் காண்பதை மட்டும் இந்த முறைக்கு மாற்ற குரோம் எக்ஸ்டன்ஷன் தொகுப்பு ஆட்டோ நிட்டோ (Autonito) உதவுகிறது. இதன் மூலம் நாம் எப்போதும் இன் காக்னிடோ எனப்படும் பிறர் அறியா இணைய உலா வகையில் காண விரும்பும், இணைய தளங்களை இதில் பட்டியலிட்டு வைக்கலாம். அவ்வாறு அமைத்த பின்னர், அந்த தளத்திற்குச் செல்கையில், குரோம் பிரவுசர், இன் காக்னிடோ முறைக்கு மாறிக் கொள்கிறது. இதற்கென தனி விண்டோவினைத் திறந்து, குறிப்பிட்ட தளத்தினை இயக்குகிறது. இந்த தளத்தின் பெயரை, அட்ரஸ் பாரில் டைப் செய்து இயக்கினாலும், அல்லது வேறு ஒரு தளம், அல்லது மெயிலில் உள்ள லிங்க் மூலம் இயக்கினாலும், இந்த வகை வழியில் தளம் நமக்குத் தரப்படுகிறது.

ஆனால், இதில் ஒரு பிரச்னை உள்ளது. இந்த வகையில் நாம் பட்டியலிடப்பட்ட தளங்கள் அனைத்தும் பிரவுசரிலேயே பட்டியலிடப் பட்டுள்ளன. இதனால், நாம் அவற்றைப் பார்த்தோம் என்பது இல்லை என்றாலும், அவை எவை என்று பிறர் அறியும் வகையில் உள்ளது என்பது தேவையற்ற ஒன்று தானே.

ஆட்டோ நிட்டோ என்ற இந்த ஆட் ஆன் தொகுப்பினை கூகுள் குரோம் எக்ஸ்டன்ஷன் காலரியில் இருந்து டவுண்லோட் செய்து கொள்ளலாம். தளத்தின் முகவரி: https://chrome.google.com/extensions/detail/aaknjhenmanmibfigajllodbhkgdigbd?hl=en



பெர்சனல் பிரேக்

ஒரு பக்கம் முழுவதும் வேர்ட் தொகுப்பிற்கான ஷார்ட்கட் கீ தொகுப்புகளைக் கொடுத்தது மிகவும் உதவியாய் இருந்தது.

–சி. புவனேஸ்வரி, விருதுநகர்

கூகுள் தொடங்கும் அனைத்தும் வெற்றி பெறுவதில்லை என்பதனைத் தெளிவாகக் கூறி உள்ளீர்கள். உங்கள் கட்டுரையைப் படித்த பின்னரே இதனைத் தெரிந்து கொண்டோம்.

–ஆ. விக்னேஷ், ஸ்ரீவில்லிபுத்தூர்

மற்ற நாடுகளை ஒப்பிடுகையில்,நாம் இன்டர்நெட் பயன்பாட்டில் முன்னேறித் தான் இருக்கிறோம். தகவலுக்கு நன்றி.

–டி.. சிவராஜ குமார், செங்கல்பட்டு

அடிக்கடி வெளியூர் செல்லும் என்னைப் போன்ற அலுவலக ஊழியர்களுக்கு போர்ட்டபிள் அப்ளிகேஷன் மிகவும் பயனுள்ள தொகுப்பு. அப்ளிகேஷன் தொகுப்புகள் அடுத்த கம்ப்யூட்டர்களில் உள்ளதா என்ற கவலையே இல்லை.

–கா. நமசிவாயம், சிவகாசி

பண்டா வைரஸ் பதிந்தேன். ஆனால் அது பிரவுசர்களில் டூல் பார் போல அமர்ந்து கொண்டு அதிக நேரத்தை எடுத்துக் கொள்கிறதே!

–டி. அருண் பிரகாஷ், சென்னை

கம்ப்யூட்டர் மலரின் பழைய இதழ்கள், இணையத்தில் கிடைக்கிறது என்ற செய்தி இதுவரை தெரியாமல், பழைய இதழ்களைத் தேடி வந்தேன். மிகவும் உபயோகமான சேவை இது.

–சா. இறையரசன், சின்னமனூர்

கடிகாரமாக மொபைல், அதுவும் ரூ.40 ஆயிரத்தில். தாங்காதுடா சாமி! இருப்பினும் இப்படி ஒன்று உள்ளது என்று பெருமூச்சுவிட்டோம்.

–எஸ். ராமசாமி, விடத்தகுளம்

வேர்டுக்கு ஆட் இன் தொகுப்புகளா! கேட்கவே வியப்பாக இருந்தது. நல்ல பயனுள்ளவையாகவும் உள்ளன.

–கே. ஆல்பர்ட், புதுச்சேரி

டைட்டில் பாரினை வண்ணமயமாக்கும் டிப்ஸ், கம்ப்யூட்டரை அழகாக வைத்திருக்க உதவுகிறது.

–சா. விஜயகுமாரி, கோவை

விசுவல் பேசிக் குறித்து விவரமான தகவல் எழுதினால், கம்ப்யூட்டர் படிக்கும் எங்களுக்கு மிகவும் உதவியாக இருக்கும்.

–எஸ்.ருத்ர குமார், காரைக்குடி

இணையப் பயன்பாடு குறித்த அனைத்து தகவல்களும் ஸ்வீட் தான். நல்ல ருசி; நல்ல தலைப்பு.

–டி.பிலோமினா, சென்னை

ஸ்டாப் ஆட்டோ பிளே, யு–ட்யூப் வீடியோவினைக் கையாளக் கிடைத்த இன்னொரு அருமையான சாப்ட்வேர். மிகவும் உபயோகமாக உள்ளது.

–ச. அமுதகுமார், ராஜபாளையம்

எப்1 கீ அழுத்தாதே என்ற எச்சரிக்கைக் குறிப்புக்கு நன்றி. எனக்கு அது போல பல லிங்குகள் வந்தன. என்னதான் பயர்வால், ஆண்ட்டி வைரஸ் போட்டாலும், இந்த கெடுக்கும் புரோகிராம்கள் வருவதனைத் தடுக்க முடியவில்லை என்பதே உண்மை.

–கே. சுந்தர்தாஸ், கோயம்புத்தூர்

ஜியில் பிரேக்கிங் குறித்த தகவல்கள், இதுவரை நான் கொண்டிருந்த தவறான எண்ணத்தை நீக்கியதுடன், ஆச்சரியத்தையும் தந்தது. வில்லனுக்கு வில்லன் உலகத்தில் உண்டு என்பது, கம்ப்யூட்டருக்கும், டிஜிட்டல் உலகத்திற்கும் தான் நன்கு பொருந்தி வருகிறது.

–எஸ் .ஜெயா பாரத், சென்னை

மொபைல் தொழில் நுட்ப தகவல் குறித்து அதிக தகவல்களைத் தருமாறு கேட்டுக் கொள்கிறோம்.

–என். தண்டபாணி, திண்டுக்கல்

இன்டர்நெட் எக்ஸ்புளோரரின் புதிய பதிப்பு, என்னைப் போன்ற எக்ஸ்பி பயன்படுத்து பவர்களுக்குப் பயனில்லை என்றால், நிச்சயம் அது பிரபலமாகாது. கம்ப்யூட்டர் உலகில், இன்னும் அதிகமாகப் பயன்படுத்தும் ஆப்பரேட்டிங் சிஸ்டம் எக்ஸ்பி என நீங்கள் தானே புள்ளிவிபரத்தோடு தெரிவித்தீர்கள். எனவே மைக்ரோசாப்ட் நிறுவனம், இதனைப் பயன்படுத்தி வருபவர்களை மதிக்க வேண்டும்.

–என். தயாளன், சென்னை

நோக்கியாவின் டச் அண்ட் டைப்

வழக்கமான 12 கீ கள் அடங்கிய போன் கீ பேடுடன், தொடுதிரை வசதியையும் அளித்துத் தன் எக்ஸ் 3 டச் அண்ட் டைப் மொபைல் போனை நோக்கியா வடிவமைத்துள்ளது. இவை இரண்டும் இணைந்து வடிவமைக்கப்பட்ட முதல் நோக்கியா போன் இதுதான். இதன் சிறப்பு இதன் ஸ்லிம் தன்மையில் உள்ளது. 9.6 மிமீ தடிமனில், 78 கிராம் எடையில் இந்த போன் அமைந்துள்ளது.

பளிச் என்ற 2.4 அங்குல வண்ணத்திரை மூலமாகவும், கீ பேட் மூலமாகவும் இதனைப் பயன்படுத்தி, டெக்ஸ்ட் செய்திகள் மற்றும் அழைப்புகளை மேற்கொள்ளலாம். வரும் அக்டோபர் மாதத்தில் வர இருக்கும் இந்த போனின் விலை ரூ. 7,500க்குள் இருக்கும் என்று தெரிய வந்துள்ளது.

இந்த மாடல் போன் நான்கு பேண்ட் அலைவரிசையில் இயங்கும் தன்மை கொண்டது. 3G, HSPA and Wi-Fi ஆகிய தொழில் நுட்பங்களைக் கொண்டுள்ளது.

மிகச் சிறியதாக இருந்தாலும், 3ஜி, டபிள்யூ லான், மியூசிக் பிளேயர், எப்.எம். ரேடியோ, 4எக்ஸ் ஸூம் வசதி கொண்ட, ஸ்டில் போட்டோ மற்றும் வீடியோ எடுக்கக் கூடிய 5 மெகா பிக்ஸெல் கேமரா தரப்பட்டுள்ளது. மெசேஜ் மற்றும் மியூசிக் செயல்பாடுகளுக்கென தனி கீகள் இருப்பது இதன் சிறப்பு. இதன் மூலம் ஓவி ஸ்டோர்ஸ் தரும் சிலவற்றை நேரடியாகப் பெறலாம். நோக்கியா மெசேஜிங் மூலம், திரை வழி உரையாடல் (சேட்) வசதியினை மேற்கொள்ளலாம். டச் ஸ்கிரீன் மூலம் மிக எளிதாக, ஆன்லைன் செல்ல முடியும். இதில் 16 ஜிபி வரை இதன் மெமரியை மெமரி கார்ட் மூலம் அதிகப்படுத்த முடியும் என்பதால், கணக்கற்ற பாடல்கள், போட்டோக்கள், வீடியோ கிளிப்களை பதிந்து ரசிக்க முடியும்.

இதன் பேட்டரி, இதனைப் பயன்படுத்தாமல் இருந்தால், 17 நாட்களுக்கு மின்சக்தியைத் தக்க வைக்கிறது. சுற்றிலும் அலுமினிய பார்டருடன், நான்கு வண்ணங்களில் இது கிடைக்கும்.

ஜி-மொபைல் போன் 468

பிரைட் டெலிகாம் நிறுவனம், அண்மையில் தன்னுடைய புதிய மாடல் ஜி–மொபைல் 468 என்னும் மொபைல் போனை, விற்பனைக்கு அறிமுகப்படுத்தியுள்ளது. ரூ.2,999 என விலை குறியிடப்பட்டுள்ள இந்த போனில் 1200mAh திறனுடன் கூடிய பேட்டரி தரப்பட்டுள்ளது. இதில் இரண்டு சிம்களைப் பயன்படுத்தலாம். 1000 முகவரிகளைக் கொள்ளும் முகவரி ஏடு, 400 எஸ்.எம்.எஸ்.களைக் கொள்ளக் கூடிய இடம், புளூடூத், ஜி.பி.ஆர்.எஸ்., நேரம் குறித்து ரெகார்ட் செய்திடும் வசதியுடன் கூடிய எப்.எம். ரேடியோ, டேட்டா பாதுகாப்பு, மொபைல் ட்ரேக்கர், உரையாடல் பதிவு மற்றும் எண்களை பிளாக் லிஸ்ட் செய்திடும் வசதி ஆகியவை தரப்பட்டுள்ளன. இதன் திரை 2 அங்குல டி.எப்.டி திரையாகத் தரப்பட்டுள்ளது. இதன் ரெசல்யூசன் 176x220 பிக்ஸெல்களுடன் அமைக்கப்பட்டுள்ளது. இதன் டிஜிட்டல் கேமராவில், 3GP, MP4 ஆகிய பார்மட்களில் வீடியோ கிளிப்களையும் எடுத்துப் பார்க்கலாம். சிறப்பான இந்து பண்டிகைகளைக் காட்டும் காலண்டர் ஒன்றும் தரப்பட்டுள்ளது.

பிளை எம்.சி.170

பல்வேறு வசதிகளை உள்ளடக்கியதாக, பிளை எம்.சி.170 மொபைல் போன் வெளிவந்துள்ளது. அனைவரும் ஒரு ஸ்மார்ட் போன் பயன்படுத்த வேண்டும் என விரும்புவதில்லை. பெரும்பாலானவர்கள், போன் அழைப்புகளுக்கும் மேலாக, எப்.எம். ரேடியோ, கேமரா, வீடியோ இயக்கம் ஆகியன இருந்தால் போதும் என எண்ணுகின்றனர். பிளை எம்.சி. 170 இந்த வகை வாடிக்கையாளர்களை நிறைவு செய்திடும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.

ரூ. 4,500 விலையிடப்பட்டுள்ள இந்த மாடலின் நீளம், அகலம், தடிமன் 115 x 51 x 10.5 மிமீ அளவில் உள்ளது. இதன் எடை 95 கிராம். மிகவும் ஸ்டைலான தோற்றத்துடன் உள்ளது. ரெகார்டிங் வசதியுடன் கூடிய எப்.எம். ரேடியோ, ஜி.பி.ஆர்.எஸ். மற்றும் எட்ஜ் தொடர்பு வசதி, A2DP இணைந்த புளூடூத் மற்றும் யு.எஸ்.பி.போர்ட் ஆகியவை உள்ளன. இதன் உள் நினைவகம் 87 எம்.பி. மெமரி. இதனை மெமரி கார்ட் மூலம் 8 ஜிபி வரை உயர்த்தலாம். Fly Raashi (ஜோசியம் பார்க்க), Nimbuzz(மெசஞ்சர் வசதி), Snaptu (சோஷியல் நெட்வொர்க்கிங் பணிகளுக்காக), ஆகிய அப்ளிகேஷன்களும் பதிந்து தரப்பட்டுள்ளன. அசைவில் இயங்கும் விளையாட்டுக்கள் மற்றும் ஆக்ஸிலரோ மீட்டர் தரப்பட்டுள்ளன. ஈக்குவலை சருடன் கூடிய ஆடியோ பிளேயர், மியூசிக் எடிட்டர், மெலடி கம்போசர், காண்டாக்ட்ஸ் பேக் அப் செய்திடும் வசதி, இ–புக் ரீடர் மற்றும் மொபைல் ட்ரேக்கர், இசையுடன் கூடிய போட்டோ ஸ்லைட் ஷோ, 1000 எஸ்.எம்.எஸ். பதிந்து வைத்தல் ஆகிய வசதிகளும் உள்ளன. 2000 முகவரிகளை வீடியோ மற்றும் போட்டோவுடன் பதிந்து அவற்றின் மூலம் அழைக்கலாம்.

பார் டைப் போன் மாடலாக உள்ள இதில் 1000 mAh திறன் கொண்ட பேட்டரி இணைக்கப் பட்டுள்ளது. பயன்படுத்தாமல் இருந்தால் 250 மணி நேரம், இதன் மின்சக்தி தாக்குப் பிடிக்கிறது.

மொபைல் போனில் புதிய ரூபாய் அடையாளம் ₹

ரூபாய் என்பதற்கான புதிய அடையாளம் ஒன்றை, அண்மையில் மத்திய அரசு அங்கீகாரம் செய்து, அறிவிப்பினை வெளியிட்டது. இந்த அடையாளத்தினை, கம்ப்யூட்டரில் பயன்படுத்த பாண்ட் வகை ஒன்று உருவாக்கப்பட்டு, இலவசமாக இணையத்தில் வெளியிடப்பட்டது. அப்படியானால், மொபைல் போனில் இந்த அடையாளத்துடன் டெக்ஸ்ட் மெசேஜ் அனுப்ப என்ன செய்யலாம்?

முதல் முதலாக, இந்த அடையாளத்தினை, லாவா இன்டர்நேஷனல் நிறுவனம் தன் மொபைல் போனில் புகுத்தியுள்ளது. சென்ற வாரம் வெளியான லாவா பி5 என்ற மொபைல் போனில், இந்த அடையாளத்தினை தனி கீ ஒன்றில் தந்துள்ளது. இந்த கீயை அழுத்தினால், ரூபாய்க்கான அடையாளம் கிடைக்கிறது. இந்தியாவில் முதன் முதலில் ரூபாய் அடையாளத்தினைத் தந்த மொபைல் என இது பெயர் பெற்றுள்ளது.

இது குறித்து இந்த நிறுவனத்தை நிறுவிய ராய் கூறும்போது, இதனை ஒரு சவாலாக ஏற்று குறுகிய காலத்தில் அமைத்து வழங்கியதாகக் குறிப்பிட்டுள்ளார். சுதந்திர தினத்தையொட்டி இதனை வழங்கி, இந்தியர்களைப் பெருமை அடையச் செய்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

கேள்வி பதில்

கேள்வி:
விண்டோஸ் 7 பயன்படுத்தத் தொடங்கி உள்ளேன். இந்த சிஸ்டம் பூட் ஆகும்போது, பவர் பட்டனை அழுத்தியவுடன், மியூசிக் ஒலி கேட்கிறது. இதனை நிறுத்த முடியாதா?

–கா. முத்துசாமி, மதுரை

பதில்: நிறுத்திவிடலாம். அந்த அருமையான இசை ஒலி உங்களுக்குப் பிடிக்கவில்லையா? ஓகே. அதற்குப் பல காரணங்கள் இருக்கலாம். அவற்றை நீங்கள் வெளியிட வேண்டாம். இதனை நிறுத்த, Start பட்டன் அழுத்தி, சர்ச் பாக்ஸில் mmsys.cpl என டைப் செய்திடவும். இனி என்டர் தட்டவும். இப்போது சவுண்ட் டயலாக் விண்டோ கிடைக்கும். இதன் கீழாக ஒரு பாக்ஸ் Play windows Startup sound என்ற வரியுடன் இருக்கும். இந்த பாக்ஸில் உள்ள டிக் அடையாளத்தினை எடுத்துவிடவும். பின்னர் ஓகே அழுத்தி வெளியேறவும். இனி உங்கள் விண்டோஸ் திறக்கும்போது, கம்ப்யூட்டரில் சத்தம் கேட்காது. பின்னொரு நாளில் அந்த மியூசிக் வேண்டும் என நீங்களோ, உங்கள் வீட்டில் உள்ளவர்களோ கேட்டால், மீண்டும் இதே போல் சென்று, பாக்ஸில் டிக் அடையாளத்தினை



அமைத்துவிடவும்.

கேள்வி: கூகுள் மெயில் அக்கவுண்ட் வைத்துள்ளேன். மெயிலில் டெக்ஸ்ட்டில் பல பார்மட்டிங் வேலைகளை (அடிக்கோடு, அழுத்த எழுத்து) செய்திட முடிகிறது. ஆனால் கூகுள் டாக்கில் இதே போல் செய்திட முடிவதில்லையே? இதற்கு என்ன செய்திட வேண்டும்?

-சீ. நரேந்திரன், சென்னை

பதில்: உங்கள் டெக்ஸ்ட்டை போல்ட் செய்திட வேண்டுமென்றால், அந்த சொல்லுக்கு முன்னால் ஆஸ்டெரிஸ்க் என்னும் நட்சத்திரக் குறியீட்டினை அமைக்கவும். எ.கா. *dinamalar* சாய்வெழுத்து எனில், அண்டர் ஸ்கோர் என்னும் அடிக்கோடு இட வேண்டும். எ.கா. _dinamalar_ கூகுள் சேட் விண்டோவிலும் இதனை மேற்கொள்ளலாம்.

கேள்வி: பிளாஷ் ட்ரைவ்கள் எத்தனை நாட்களுக்கு வரும்? இதனை நம்பி, பேக் அப் ட்ரைவாகப் பயன்படுத்தலாமா?

-சி. தமிழரசி, மதுரை

பதில்: நல்ல கேள்வி. நாம் எதனை விலை கொடுத்து வாங்கினாலும், பல ஆண்டுகள் அது நன்றாக நமக்குப் பயன்படும் என்ற நம்பிக்கையை வளர்த்துக்

கொள்கிறோம்.

இந்த நம்பிக்கை பெரும்பாய்ந்து போகும்போது, வருத்தப்படுகிறோம். எந்தப் பொருளும் இயங்கா நிலையை நிச்சயம் அடையும். எனவே ஒன்றைப் பற்றி புரிந்து கொண்டு, எச்சரிக்கையுடன் பயன்படுத்துவது நல்லது.

ஒரு பிளாஷ் ட்ரைவ் அழியாத நினைவகமாகும். அதாவது மின் ஓட்டம் செலுத்தாத நிலையிலும், அதில் பதியப்பட்ட டேட்டா அப்படியே இருக்கும். இப்போதெல்லாம் 250 எம்பி என்ற அளவிலிருந்து 80 ஜிபி வரையிலான கொள்ளளவில், பிளாஷ் ட்ரைவ்கள் கிடைக்கின்றன. பிளாஷ் ட்ரைவ்கள் இயங்காமல் போனால், அதிலுள்ள டேட்டாவினை மீண்டும் பெற முடியும் என்பது நமக்கு நம்பிக்கை தரும் செய்தியாகும். நீங்கள் உங்கள் பிளாஷ் ட்ரைவினை டேட்டாவினை பேக் அப் செய்திட மட்டும் பயன்படுத்தினால், அதனை உலர் சீதோஷ்ண நிலை உள்ள இடத்தில், அதன் மூடியைக் கொண்டு மூடி வைத்துவிடுவதே நல்லது. இந்த வகையில் மூடி உள்ள பிளாஷ் ட்ரைவ் அதிக பாதுகாப்பினைத் தரும். மூடி இல்லாமல், பிளாஷ் ட்ரைவின் தலைப் பகுதியை வெளியே தள்ளி, உள்ளே இழுத்துப் பயன்படுத்தும் பிளாஷ் ட்ரைவ்களும் உள்ளன. இவற்றில் தூசு, நீர் புகும் வாய்ப்புகள் இருப்பதால், பேக் அப் பயன்பாட்டிற்கு மூடி உள்ள பிளாஷ் ட்ரைவினையெ பயன்படுத்துவது நல்லது. குடும்ப போட்டோக்கள் போன்ற, மீண்டும் அமைக்க முடியாத டேட்டாக்களுக்கான பேக் அப் அமைப்பதாக இருந்தால், வெவ்வேறு ட்ரைவ்களில் வைத்துக் கொள்வது நல்லது.

கேள்வி: கீ போர்டைப் பயன்படுத்தி, மவுஸ் பாய்ண்ட்டரைக் கண்ட்ரோல் செய்வது எப்படி என விளக்கவும்.

–நா.கதிரேசன், விழுப்புரம்

பதில்:இடது புறம் உள்ள ஷிப்ட்+ஆல்ட்+நம்லாக் கீகளை முதலில் அழுத்தவும். இப்போது மவுஸ் கீஸ் என்ற விண்டோ கிடைக்கும். இதில் யெஸ் என்ற பட்டனில் கிளிக் செய்திடவும். இதை அழுத்தியவுடன், மவுஸ் கீகள் இயங்கத் தொடங்கி விடும். இப்போது கீ8 அழுத்தினால் கர்சர் மேலே செல்லும். கீ2 அழுத்தினால், கீழே செல்லும். 6 அழுத்தினால் வலது புறமும், 4 அழுத்தினால் இடது புறமும் செல்லும். எதன்

மீதாவது கர்சரை வைத்து கிளிக் செய்திட வேண்டும் என்றால், கீ 5 அழுத்தவும். டபுள் கிளிக் செய்திட + கீ அழுத்தவும். ரைட் கிளிக் செய்திட – கீ (மைனஸ்) அழுத்தவும். எதனையாவது இழுக்க வேண்டும் என்றால், அந்த ஆப்ஜெக்ட் அல்லது ஐடெம் மீது கர்சரைக் கொண்டு சென்று என்டர் கீ அழுத்தவும். பின் அதனை விட்டுவிட டெலீட் கீ அழுத்தவும்.

மீண்டும் மவுஸ் கீகள் இயக்கத்தினை நிறுத்த, இடது ஷிப்ட்+ஆல்ட்+நம் லாக் கீகளை அழுத்தவும்.

கேள்வி: இன்டர்நெட் எக்ஸ்புளோரர் தொகுப்பை பிரவுசராகப் பயன்படுத்துகிறேன். இரவில் இதனை முடிவிட்டுப் பின் பகலில் திறக்கும்போது, நான் இறுதியாகப் பார்த்த வெப்சைட்கள் அந்த அந்த டேப்களில் கிடைக்குமா? இதனை எப்படி செட் செய்திட வேண்டும்?

-கா. பாக்யராஜ், கோவை

பதில்: இன்டர்நெட் எக்ஸ்புளோரர் விண்டோவினைத் திறந்து கொள்ளவும். விண்டோவின் மேல் வலது புறத்தில் உள்ள டூல்ஸ் மீது கிளிக் செய்திடவும். அங்கு Reopen Last Browsing Session என்று இருப்பதனைத் தேர்ந்தெடுக்கவும். நீங்கள் பார்த்துக் கொண்டிருந்த டேப்களுடன், பிரவுசர் திறக்கப்படும்.

கேள்வி: ஆன்லைனில் ஆங்கிலம் தமிழ் அகராதி உள்ளதா? குழப்பம் இன்றி பொருள் தருமா?

-எ.மோனிகா ரமேஷ், திருமயம்

பதில்: குழப்பம் என எதனை நீங்கள் குறிப்பிடுகிறீர்கள் என்று தெரியவில்லை. ஒருவேளை தமிழ் எழுத்துவகையில் ஏற்படும் குழப்பத்தினை நீங்கள் குறிப்பிடுகிறீர்கள் என்று எண்ணுகிறேன். இப்போதெல்லாம், இத்தகைய நூல்கள் அனைத்தும் யூனிகோட் தமிழில் கிடைப்பதால், உங்களிடம் விண்டோஸ் எக்ஸ்பி அல்லது அதற்குப் பின் வந்த ஆப்பரேட்டிங் சிஸ்டம் இருந்தால், குழப்பம் எதுவும் இருக்காது. கீழே சில தள முகவரிகள் தருகிறேன். முயற்சிக்கவும்.

1.http://www.thozhilnutpam.com/chollagaraathi .htm
2. http://www.tamilvu.org/library/o33/htm l/o 3300001.htm
3. http://www.tcwords.com
4. http://www.tamildict.com/deutsch.php? menu=new&action=new
5. http://ta.wiktionary.org/wiki/

மேற்கண்டவற்றுள் எது உங்களுக்கு இலகுவாகவும் நீங்கள் விரும்பும் வகையிலும் உள்ளதோ, அதனையே பின்பற்றலாம்.

கீழ்க்காணும் தளத்தில், மொபைல் போனுக்கான ஆங்கிலம் தமிழ் அகராதி ஒன்று வெளியாக இருப்பதாக, விளம்பரம் தரப்பட்டுள்ளது. இது வெளிவரும் பட்சத்தில், மொபைல் போனிலேயே அகராதியினை வைத்துக் கொள்ளலாம். http://www.tamilcube.com/dictionary/mobile

கேள்வி: வேர்ட் தொகுப்பில் டாகுமெண்ட் அமைக்கையில், பக்க இடைவெளியில் சில பாரக்கள் பிரித்துக் காட்டப்படுகின்றன. இவற்றைச் சேர்ந்தவாறே அமைக்க முடியுமா? என்ன செட் செய்திட வேண்டும்?

-எஸ். பாஸ்கரன், காரைக்கால்

பதில்: நீங்கள் டைப் செய்து டாகுமெண்ட் அமைத்தவுடன் பக்க குறுக்குக் கோடு பாராக்களைப் பிரித்திருந்தால் அந்த பாராக்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளவும். அல்லது அனைத்து பாராக்களையும் தேர்ந்தெடுத்துக் கொள்ளவும். பின் இதில் மவுஸை வைத்து வலது பக்கம் கிளிக் செய்திடவும். விரியும் மெனுவில் "Paragraph" என்பதனைத் தேர்ந்தெடுக்கவும். இப்போது பல டேப்கள் அடங்கிய விண்டோ ஒன்று திறக்கப்படும். இதில் "Line and Page Breaks" என்ற டேபைக் கிளிக் செய்திடவும். கிடைக்கும் பிரிவில் "Keep lines together" என்ற இடத்தில் டிக் அடையாளத்தை ஏற்படுத்தி ஓகே கிளிக் செய்து விண்டோவினை மூடவும். இனி பாராக்கள் நீங்கள் கேட்ட படி ஒரே பக்கத்தில் அமையும்.